# வேதவசன அடிப்படையில் ஒரு கிறிஸ்தவனின் அடையாளமும் நிலையும்

**நீல் T. ஆன்டர்சன் எழுதிய "அடிமைத்தனத்தை முறிப்பவர்" ,"இருளின் மீது வெற்றி" புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது**

கீழ்க்காணும் கூற்றுகள் வேதவசன அடிப்படையில் கிறிஸ்துவில் நீ யார் மற்றும் உன் நிலை என்ன என்தைத் தொகுத்துக் கூறுகின்றன. கிறிஸ்துவில் உனது விடுதலைக்கு அஸ்திபாரமாக அமைவதும் இவையே. இந்தக் கூற்றுகளை அடிக்கடி வாய்விட்டுச் சத்தமாகப் படி. இப்பொழுது நீ ஆவிக்குரிய போராட்டத்தில் சிக்கியிருப்பாயானால் ஒரு மாதம் வரை ஒவ்வொரு நாளும் ஒருமுறையாவது இவற்றை உரக்கப்படி.

## நான் யார்?

யாத்திராகமம்

நான் ''இருக்கிறவராக இருக்கிற'' அவர் அல்ல. (3:14, யோவான் 8:24, 28, 58) ஆனால் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன் (1 கொரிந்தியர் 15:10).

மத்தேயு

நான் பூமிக்கு உப்பாய் இருக்கிறேன் (5:13)

நான் பூமிக்கு வெளிச்சமாய் இருக்கிறேன். (5:14)

யோவான்

நான் தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறேன். (1:12)

நான் மெய்யான திராட்சை செடியின் ஒரு கொடியாக, கிறிஸ்துவின் ஜீவன் வழிந்தோடும் ஒரு வாய்க்காலாக இருக்கிறேன். (15:1,5)

நான் கிறிஸ்துவின் சிநேகிதனாக இருக்கிறேன். (15:15)

நான் கிறிஸ்துவில் கனி கொடுக்கும்படியாகத் தெரிந்து கொள்ளப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறேன். (15:16)

ரோமர்

நான் நீதிக்கு அடிமையாய் இருக்கிறேன். (6:18)

நான் தேவனுக்கு அடிமையாய் இருக்கிறேன். (6:22)

நான் தேவனுடைய புத்திரனாய் இருக்கிறேன்:

ஆவியின்படி தேவன் என் பிதாவாய் இருக்கிறார் (8:14, 15, கலாத்தியர் 3:26, 4:6)

நான் கிறிஸ்துவுடனே கூட சுதந்திரவாளியாய் இருக்கிறேன், அவருடைய

சுதந்திரத்திற்குப் பங்காளியாய் இருக்கிறேன் (8:17)/

1 கொரிந்தியர்

நான் தேவனுடைய ஆலயமாக – அவர் வசிக்கும் ஸ்தலமாக இருக்கிறேன். அவருடைய

ஆவியானவர், அவருடைய ஜீவன் என்னில் வாசம் செய்கிறார் (3:16, 6:19)

நான் கர்த்தரோடு இசைந்திருக்கிறேன், அவருடனே ஒரே ஆவியாய் இருக்கிறேன் (6:17)

நான் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாய் இருக்கிறேன் (12:27, எபேசியர் 5:30)

2 கொரிந்தியர்

நான் புதுச் சிருஷ்டியாய் இருக்கிறேன் (5:17)

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

நான் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறேன், ஒப்புரவாக்குதலின் ஊழியக்காரனாய்

இருக்கிறேன் (5:18,19).

கலாத்தியர்

நான் தேவனுடைய பிள்ளையாயும், கிறிஸ்துவுடனே கூட ஒன்றாயும் இருக்கிறேன்

(3:26, 28)

நான் தேவனுடைய குமாரனாய் இருப்பதால் அவருக்குச் சுதந்தரவாளியாயும் இருக்கிறேன் (4:6,7)

எபேசியர்

நான் ஒரு பரிசுத்தவான் (1:1:1, கொரிந்தியர் 1:2, பிலிப்பியர் 1:1, கொலோசெயர் 1:2)

நான் தேவனுடைய செய்கையாக – அவரது கையின் கிரியையாக – கிறிஸ்துவின் பணியைச் செய்வதற்காக அவரில் புதிதாய் பிறந்தவனாக இருக்கிறேன். (2:10)

நான் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாய் இருக்கிறேன் (2:19)

நான் கிறிஸ்துவின் கைதியாக (கட்டுண்டவனாக) இருக்கிறேன் (3:1, 4:1)

நான் நீதியும் பரிசுத்தமும் உள்ளவனாய் இருக்கிறேன் (4:24).

பிலிப்பியர்

நான் பரலோகக் குடிமகனாய் இருக்கிறேன், உன்னதங்களில் உட்கார்ந்திருக்கிறேன் (3:20, எபேசியர் 2:6)

கொலோசெயர்

நான் கிறிஸ்துவுடனே தேவனக்குள் மறைந்திருக்கிறேன் (3:3)

கிறிஸ்துவே என் ஜீவனாய் இருப்பதால் நான் அவரது ஜீவனின் வெளிப்பாடாய் இருக்கிறேன். (3:4)

நான் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தனும் பிரியனுமாய் இருக்கிறேன் (3:12, 1 தெசலோனிக்கேயர் 1:4).

1 தெசலோனிக்கேயர்

நான் இருளின் பிள்ளையாக அல்லாமல் வெளிச்சத்தின் பிள்ளையாக இருக்கிறேன் (5:5).

எபிரெயர்

நான் பரம அழைப்பிற்குப் பங்குள்ளவனாய் இருக்கிறேன் (3:1).
நான் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவனாய் இருக்கிறேன், அவருடைய ஜீவனில் பங்கடைந்திருக்கிறேன் (3:14).

1 பேதுரு

கிறிஸ்துவில் ஆவிக்கேற்ற மாளிகையாகக் கட்டப்பட்டு வரும் தேவனுடைய ஜீவனுள்ள கல்லாக இருக்கிறேன் (2:5)

நான் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியைச் சேர்ந்தவன், இராஜரீக ஆசாரியக் கூட்டத்தையும், பரிசுத்த ஜாதியையும் சேர்ந்தவன், தேவனுக்குச் சொந்தமான ஜனத்தான் (2:9, 10).

நான் வாழுகின்ற இந்த உலகில் அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன் (2:11)

நான் பிசாசுக்கு எதிராளியாய் இருக்கிறேன் (5:8)

1 யோவான்

நான் தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறேன், கிறிஸ்து மீண்டும் வெளிப்படும் போது அவருக்கு ஒப்பாய் இருப்பேன் (3:1,2)

நான் தேவனால் பிறந்திருக்கிறேன், பொல்லாங்கன் – சாத்தான் – என்னைத் தொட முடியாது (5:18)

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்